2013 மார்ச் 26]

திரு. மு. திராவிடமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்பணியை மீண்டும் துவங்கி விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியில் 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைப்பதற்கு கருத்துரு பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தப் பணியில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது; தொய்வு ஏற்பட்டிருக்கிறது; தொடர்ந்து பணிகள் நடைபெறவில்லை என்றும் குறிப்பிடுகிறார். அதிலே என்னென்ன இடையூறுகள் இருக்கின்றன என்பதை உடனடியாகக் கண்டறிந்து, அவற்றை நீக்கி, அந்தப் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

62—

பேருந்து நிலையம்

***6512—திரு. ந. நஞ்சப்பன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

பெண்ணாகரம் பேரூராட்சிப் பேருந்து நிலையத்தில் தற்பொழுதுள்ள இரும்புத் தகட்டினாலான பயணியர் நிழற்கூடத்தினை மாற்றி 25 மீட்டர் X 20 மீட்டர் அளவுக்கு ஆர்.சி.சி. தகட்டினால் பயணியர் நிழற்கூடத்தினை அமைக்கவும், பேருந்து நிலையம் முன்புறம் 150 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் கட்டவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.*

திரு. ந. நஞ்சப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தப் பேருந்து நிலையம் பழைய பேருந்து நிலையமாக இருக்கிறது. இப்போது அதிகரித்திருக்கிற போக்குவரத்து வளர்ச்சிக்குத் தகுந்தமாதிரி பேருந்துகளை நிறுத்துவதற்கு இடம் போதாமல் இருக்கிறது. அதனை விரிவுபடுத்துவதற்கான நிலமும் இருக்கிறது. எனவே, பெண்ணாகரம் பேரூராட்சிப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டுத்தான் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அந்தப் பேருந்து நிலையத்தினுடைய மொத்தப் பரப்பளவு 1.5 ஏக்கராக உள்ளது. அங்கே கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 90 பேருந்துகள் வந்து செல்கின்றன. அந்தப் பேருந்து நிலையம், 10 பேருந்துகள் மட்டுமே நிறுத்துகின்ற அளவிலே இருக்கின்ற காரணத்தாலும், ஏற்கெனவே இருக்கின்ற நிழற்கூடம்*

2013 மார்ச் 26]

பழுதடைந்திருப்பதாலும், அதனை மாற்றி புதிய நிழற்கூடம் அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபாயும், அங்கே மழை நீர் தேங்குகின்ற காரணத்தினால், மழை நீரை உடனடியாக வெளியேற்றுவதற்காக, மழை நீர் வடிகாலுக்காக 10 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெறவிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. நஞ்சப்பன் அவர்கள்.

திரு. ந. நஞ்சப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணிகளை மேற்கொள்வதாக அறிவித்தமைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் பேருந்து நிலையம் கட்டப்பட்டு 25 ஆண்டுகள் ஆகியுள்ளன. அதனை விரிவுபடுத்துவதாகத் தெரிவித்து, பகுதி–1, பகுதி–2, பகுதி–3 என பிரிக்கப்பட்டது. தற்போது அவற்றில் இரண்டு பகுதிகள் பயன்பாட்டில் உள்ளன. 25 ஆண்டுகள் கடந்த நிலையிலும், பேருந்துகளுடைய எண்ணிக்கை மற்றும் மக்கள்தொகை அதிகமாகியுள்ள நிலையிலும், வரவிருக்கின்ற உலகப் பிரசித்தி பெற்ற மகாமகம் திருவிழாவிற்கு வரவிருக்கும் இலட்சக்கணக்கான பக்தர்கள் பயன்பெறும் வகையிலும், கும்பகோணத்திலுள்ள மக்கள் பயன்பெறும் வகையிலும், கும்பகோணம் பேருந்து நிலையத்தின் மூன்றாவது பகுதியினை விரிவாக்கம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் நகரம் பிரசித்திப் பெற்ற கோயில் ஸ்தலங்களைக் கொண்ட ஒரு நகரம். மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து கும்பகோணம் நகரத்தினுடைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கையையும் பரிசீலனை செய்து, அதற்கேற்றவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகரத்திலே புதிய பேருந்து நிலையம் இருக்கின்றது. பெயர்ப் பலகையில் மட்டும்தான் “புதிய பேருந்து நிலையம்” என்ற அடைமொழி இருக்கிறதே தவிர, பல ஆண்டுகளாக அடிப்படை வசதி இல்லாமல் அது பயன்பாட்டிலே இருந்து வருகிறது. மக்கள்தொகை பெருக்கத்திற்கேற்ப அந்தப் பேருந்து நிலையத்தில் வசதிகள் இல்லை. அதை விரிவுபடுத்துவதற்கான இடமும் அந்தப் பேருந்து நிலையத்தின் அருகிலேயே இருக்கின்றது. எனவே, இராமநாதபுரம் நகர புதிய பேருந்து நிலையத்தை விரிவுபடுத்துவதற்கு இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற நிகழ்வுகள் சில நகரங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. காரணம், ஏற்கெனவே இருக்கின்ற பேருந்து நிலையங்கள் மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே, புதிய பேருந்து நிலையங்களுக்குப் பேருந்துகள் வராமல் பழைய பேருந்து நிலையத்திற்குச் சென்றுவிடுவது இயற்கையாகவே நடந்துகொண்டிருக்கிறது. இப்போது புதிய பேருந்து நிலையம்

2013 மார்ச் 26]

அமைக்கப்பட்டு அங்கே பேருந்துகள் வரவில்லையென்று சொன்னால், அங்கு பேருந்துகள் வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அங்கே அனைத்து அடிப்படை வசதிகளும் குறைவாக இருக்கின்றபட்சத்தில், அவை முறையாக நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 63, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

63—

தொழிற்பேட்டை

***21836 திரு. வே. குணசீலன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வந்தவாசி தொகுதி, வந்தவாசியில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், தேவையான அரசுப் புறம்போக்கு நிலங்கள் கிடைக்கும்பட்சத்தில், போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழில் திட்டங்களுடனும், தொழில் துவங்க ஆர்வமுள்ள 20 தொழில் முனைவோர்கள் முன்வந்தால், வந்தவாசி தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைப்பதற்கு சிட்கோ நிறுவனம் மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.